<u>**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**</u>

<u>**அசல் வழக்கு எண். 53/2022**</u>

2024- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 – ஆம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அண்ணாதுரை | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | சந்திரஹாசன் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | குன்னம் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 58/2024 |

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :-

1) நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எனது வழக்கறிஞர் எனக்கு படித்து சொன்னதின் பேரில் தெரியும். தாவா சொத்து மொத்தம் எத்தனை செண்ட் என்றால் 27 செண்ட் ஆகும். நான் 27 செண்டிற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். சொத்து எனது தாத்தா காளிங்கராயரின் அப்பா சிதம்பரம் சம்பாதித்த சொத்தாகும். சிதம்பர படையாச்சி நிலத்தை கிரயம் வாங்கினாரா என்றால் ஆமாம். அந்த கிரய பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) சிதம்பர படையாச்சி கிரயம் வாங்கிய பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது அப்பா சொல்லி தான் கிரயம் வாங்கிய விபரம் எனக்கு தெரியும். எனது தாத்தா காளிங்கராயருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மொத்தம் 5 வாரிசுகள் அதில் 3 ஆண், 2 பேர் பெண்கள் ஆவார்கள். முதல் மற்றும் இரண்டாவது வாரிசுகள் பெண் ஆவார்கள். அவர்களுடைய பெயர்கள் தெரியாது. அவர்கள் நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார்கள். மூன்றாவது எனது பெரியப்பா சிதம்பர படையாச்சி ஆவார். 4 வது கணேச படையாச்சி ஆவார். 5 வதாக எனது அப்பா சந்திரஹாசன் ஆவார். எனது தாத்தா காளிங்கராயர் இறப்பதற்கு முன்பாகவே எனது அப்பா சந்திரஹாசன் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3) கணேச படையாச்சி எப்போது இறந்தார் என்றால் எனது தாத்தா இறப்பதற்கு முன்பாகவே கணேச படையாச்சி இறந்துவிட்டார். சிதம்பர படையாச்சிக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். எனது 1ம் அத்தைக்கு குழந்தை இருந்ததா என்றால் இருந்தது. அவர் தான் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி ரோசகிளி ஆவார். எனது பெரியப்பா கணேசன் என்பவருக்கு தான் எனது அத்தை மகளான ரோசகிளி என்பவரை

திருமணம் செய்து வைத்தார்கள். கணேசனுக்கு வாரிசுகள் இருந்தாரா என்றால் ரோசகிளியும் அவரும் சேர்ந்து வாழவில்லை. அவர்கள் இருவருக்கும் எந்த குழந்தைகளும் கிடையாது. ஆனால் எனது பெரியப்பா கணேசன் வேறு ஒரு திருமணம் செய்துக் கொண்டதன் மூலம் ஒரு பெண் குழந்தை உள்ளது. அவரது பெயர் பெரியநாயகம் ஆகும்.

4) பெரியநாயகத்திற்கு எனது தாத்தா காளிங்கராயர், கணேசனுக்கு உரிய பங்கினை தனியாக ஒதுக்கிக் கொடுத்துவிட்டார். அதை அனுபவம் செய்து வருகிறார். பெரியநாயகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலங்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது. காளிங்கராய படையாச்சி அவரது நடு மகனான கணேசனுக்கு தனியாக சொத்துக்களை பிரித்துக் கொடுத்துவிட்டார். எந்த வருடம் பிரித்துக் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பெரியநாயகம் திருமணம் செய்துக் கொண்டு தனி வீட்டில் வசித்துக் கொண்டிருக்கிறார். கணேசன் எனது தாத்தாவுடன் இருந்தாரா அல்லது தனியாக இருந்தாரா என்றால் தனியாக தான் இருந்தார். எனது தாத்தா, எனது அப்பா, எனது பெரியப்பா சிதம்பரம், அவருடைய பிள்ளைகள் ஆகிய நாங்கள் அனைவரும் ஒன்றாக இருந்தோம். எங்களுடன் தான் ரோசகிளியும் இருந்தார் என்றால் சரிதான்.

5) கணேசனின் சொத்துக்களில் ரோசகிளிக்கும் பங்கு கொடுத்தார் என்றால் எனது தாத்தா காளிங்கராயருக்கு அவ்வாறு சொத்தை பிரித்துக் கொடுப்பதற்கு உரிமையில்லை. எனக்கும், எனது பெரியப்பாவிற்கும் யார் சொத்தை பிரித்துக் கொடுத்தார்கள் என்றால் அதை எனது தாத்தா காளிங்கராயர் தான் கொடுத்தார். கணேசன் மற்றும் ரோசகிளிக்கு சொத்து எழுதிக் கொடுக்க காளிங்கராயருக்கு உரிமையில்லாத போது, எங்களுக்கு மட்டும் சொத்தை எழுதிக் கொடுக்க உரிமை இருந்ததா என்றால் நாங்கள் வாரிசு என்பதால் எங்களுக்கு பிரித்துக் கொடுத்தார். ரோசகிளிக்கும், கணேசனுக்கும் எனது தாத்தா காளிங்கராயர் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். ரோசகிளியும், கணேசனும் சேர்ந்து வாழாததால் கணேசனுக்கு உள்ள சொத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை ரோசகிளிக்கு 1977 ஆம் ஆண்டு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6) கணேசனுக்கு எனது தாத்தா சொத்தை பிரித்துக் கொடுத்தது பற்றி எனக்கு எந்த வருடம் தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனது அப்பா, அம்மா சொன்னதன் மூலம் தான் கணேசன் குடும்பத்திற்கு சொத்து பிரிந்த விபரம் எனக்கு தெரியும். எனது அப்பா, அம்மா மேற்படி விபரம் பற்றி எனக்கு சொல்லும் போது என்ன வயது இருக்கும் என்றால் 10 வயது இருக்கும். அப்படி என்றால் நீங்கள் 1967 ஆம் ஆண்டு பிறந்ததாக சொன்ன நிலையில் உங்களுக்கு மேற்படி விபரம் 1977 ஆம் ஆண்டு தெரிந்திருக்குமா என்றால் தெரிந்திருக்கும். நான் பிறப்பதற்கு முன்பே கணேசன் இறந்துவிட்டாரா என்றால் இல்லை. நான் 10, 15 வயதாக இருக்கும் போது தான் இறந்து போனார்.

DMCumbakonam

7) நான் தாக்கல் செய்துள்ள வம்சாவழி பட்டியலில் கணேசனையோ, எனது அத்தைகளையோ காட்டவில்லை என்றால் சரிதான். அவர்களை காட்டினால் ரோசகிளிக்கு சொத்து எழுதி வைத்த விபரம் தெரிந்துவிடும் என்பதால் தான் அவர்களை வம்சாவழி பட்டியலில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த வெளிநாட்டிற்கு சென்றேன் என்றால் துபாய்க்கு சென்றுள்ளேன். எந்த வருடம் சென்றேன் என்றால் 1995 ஆம் வருடம் சென்றேன். எனக்கு யார் விசா எடுத்து கொடுத்தார்கள் என்றால் எனது மச்சினன் தேவேந்திரன் என்பவர் மூலமாக விசா எடுத்தேன். எனது மச்சினன் மூலமாக நான் வெளிநாடு செல்லவில்லை என்றாலும், இவ்வழக்கின் 2ம் சாட்சி முனிசிராவின் கணவர் தாவூத் கனி என்பவர் மூலமாக தான் விசா பெற்றேன் என்றால் சரியல்ல.

8) அந்த விசாவிற்கு கொடுக்க வேண்டிய பணத்திற்காக தான் இந்த 4 செண்ட் நிலத்தை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் இல்லை. எனது குடும்ப செலவிற்காக விற்பனை செய்தேன். என்னுடைய அண்ணன், தம்பிகள் அனைவரும் சேர்ந்து தான் விற்பனை செய்தோம். அந்த சமயத்தில் எனக்கு திருமணமாகியிருந்ததா என்றால் திருமணமாகியிருந்தது. எனது இரண்டு தம்பிகளுக்கும் திருமணம் ஆகவில்லை. ரோசகிளி எனது தாத்தா இருந்தவரை எங்களுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு ரோசகிளி, சுப்ரமணியன் என்கிற குருநாதன் வீட்டிற்கு சென்றுவிட்டாரா என்றால் இல்லை. அவர் தனியாக தான் இருந்தார். எனது மனைவிக்கும், ரோசகிளிக்கும் ஒத்து வராததால் எனது மனைவி ரோசகிளியை அடித்து குருநாதன் வீட்டிற்கு அனுப்பிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

9) ரோசகிளியை குருநாதன் தான் சாகும் வரை கவனித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. ரோசகிளிக்கு உடல்நிலை சரியில்லாத போது குருநாதன் தான் அவரை செலவு செய்து கவனித்துக் கொண்டார் என்றால் இல்லை. நாங்கள் ஆளுக்கு கொஞ்சம் போட்டு செலவு செய்து தான் கவனித்து வந்தோம். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், ரோசகிளியை குருநாதனும், அவரது மனைவியும் தான் கவனித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. ரோசகிளியை குருநாதன் கவனித்துக் கொண்டதால் தான் ரோசகிளி அவருக்குரிய சொத்தினை 1ம் பிரதிவாதியான சுப்ரமணியன் என்கிற குருநாதனும் எழுதி வைத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் பிறகு தான் மேற்படி விபரம் தெரிய வந்தது. மேற்படி சொத்தை ரோசகிளி எப்போது சுப்ரமணி என்கிற குருநாதனுக்கு எழுதி வைத்த விபரம் தெரியும் என்றால் 2012 ஆம் ஆண்டு எனக்கு தெரியும். எந்த வருடம் எழுதி வைத்தார் என்று தெரியுமா என்றால் 2012 ஆம் வருடம் எழுதி வைத்தார். 2012 ஆம் வருடம் நான் வெளிநாட்டில் இருந்தேனா என்றால் இல்லை. இங்கு தான் இருந்தேன்.

10) எனது வீடும், சுப்ரமணி வீடும் அருகருகே உள்ள வீடு என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும் சுப்ரமணி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் இருக்கும். ரோட்டிற்கும் மேற்கே சுப்ரமணியும், கிழக்கு பகுதியில் நானும்

இருக்கிறோம். ரோசகிளியும் ரோட்டிற்கு மேற்கே இருந்தாரா என்றால் இல்லை. அவர் ஊருக்குள் இருந்தார். அவர் எங்கிருந்தார் என்பதற்கு என்னிடம் ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் அவர் ஊருக்குள் இருந்த பழைய வீட்டில் இருந்தார். அந்த பூர்வீக வீடு தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் அந்த சொத்தை பொருத்த வரை பாகம் பிரிக்கப்படாமல் பொதுவாக உள்ளது. மற்ற சொத்துக்களை பொறுத்து நாங்கள் பாகம் பிரித்துக் கொண்டோம். எனக்கும், குருநாதனுக்கும் பாகம் பிரித்துக் கொண்டோமா என்றால் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டோம். அதன் அடிப்படையில் அவரவருக்கு பிரிந்ததை அவரவர் அனுபவித்து வருகிறோம். பட்டா கூட்டு பட்டாவாக உள்ளது.

11) தாவா சொத்தை எனது தாத்தா ரோசகிளிக்கு கொடுத்த விபரம் எனக்கு 10 வயதிலேயே தெரியும் என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்தை ஆதாரமாக வைத்து தான் வாடகைக்கு விட்டு ரோசகிளி வாழ்ந்து வந்தார் என்றால் நாங்கள் அனைவரும் ஆளுக்கு கொஞ்சமாக அவருக்கு கொடுத்து வந்தோம். நான் வெளிநாட்டில் இருந்த போது ரோசகிளிக்கு நான் பணம் அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். எனது மனைவியின் மூலமும் கொடுத்திருக்கிறேன். பேங்க் மூலமாக அனுப்பினேனா என்றால் இல்லை. ஆட்கள் மூலமாக கொடுத்தேன். நான் பணம் கொடுத்தனுப்பிய ஆட்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. எனது மனைவி, ரோசகிளிக்கு கொடுத்த பணத்தை அவரிடம் கொடுக்காததால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

12) ரோசகிளி எந்த வருடம் இறந்து போனால் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் இறந்து போனார். 2019 ஆம் வருடம் இருக்குமா என்றால் இருக்கலாம். ரோசகிளி அவருக்கு கொடுத்த இடத்தில் தான் வீடு கட்டி குடியிருந்து வந்து அந்த வீட்டில் தான் இறந்து போனார் என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பி 4 செண்ட் இடம் தொடர்பாக என் மீது அசல் வழக்கு எண் 607/2021 என வழக்கு தொடர்ந்துள்ளாரா என்றால் ஆமாம். திருமணமாகாத எனது தம்பிகளை ஏமாற்றி இந்த இடத்தை நான் எழுதி கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ரோசகிளக்கு சொந்தமானது என்றாலும் அவரை 1ம் பிரதிவாதி கவனித்துக் கொண்டதால் அவருக்கு மேற்படி சொத்தை ரோசகிளி எழுதிக் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்தை அபகரிக்க வேண்டுமென்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வீட்டில் நான் விபரமானவர் என்பதால் வருவாய் துறை ஆவணங்களில் எனது பெயரை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல.

13) அதனால் தான் 1ம் பிரதிவாதி தாசில்தார் விசாரணைக்கு என்னை அழைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் பட்டா தொடர்பாக தாசில்தார் விசாரணைக்கு செல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்து மேற்படி நடவடிக்கையை முடக்கி வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி வழக்கை தொடர்ந்து நடத்தாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு எனது தம்பியான 1ம்

பிரதிவாதியின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. என் மற்ற சொத்துக்கள் ஒன்றாக இருக்கும் நிலையில் இந்த சொத்தை பொறுத்து மட்டும் வாய்கறாராக பாகம் ஏற்பட்டது என்று சொல்லியிருப்பது பொய் என்று சொன்னால் சரியல்ல. பாகம் பிரித்துக் கொண்டால் மேற்படி பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எங்களிடம் பணம் இல்லாததால் நாங்கள் பதிவு செய்துக் கொள்ளவில்லை. எவ்வளவு செலவாகும் என்று கேட்டுத் தெரிந்துக் கொண்டேனா என்றால் இல்லை. அன்றாடம் வேலை செய்து சம்பாதிப்பதால் அதுபற்றி தெரிந்துக் கொள்ளவில்லை. நான் பத்திர பதிவு அலுவலகம் சென்று விசாரித்த போது ஏற்கனவே தாவா சொத்தை ரோசகிளி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துவிட்டதால் பத்திரம் பதிவு செய்ய முடியாது என்று சொன்ன விபரத்தை தெரிந்துக் கொண்டு தான் நான் பத்திரம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

14) அதனால் தான் காலதாமதமாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை எனது தாத்தா காளிங்கராயர் ரோசகிளியின் வாழ்வாதாரத்திற்காக எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. இதே போல் தான் கணேசனுடைய மகளுக்கும் சொத்துக் கொடுத்துள்ளார் என்றாலும் எனக்கு தெரியாது. ரோசகிளி 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை எழுதிக் கொடுத்த விபரம் தெரிந்துக் கொண்டு வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCum JM Court, Kunnam